செ.வெ.எண்: 852 நாள்: 18.12.2019

**சுற்றுசூழலுக்கு கேடு விளைவிக்கும் வகையில் கழிவுகளை மாவட்டத்தில் கொட்ட முயன்றால் கடும் நடவடிக்கை.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

சுற்றுசூழலுக்கு கேடு விளைவிக்கும் வகையில் கழிவுகளை மாவட்டத்தில் கொட்ட முயன்றால் கடும் நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுகா, மாத்தூர் கிராமம், விவேகானந்தா நகர் பகுதியில் தோல் கழிவுகள், பல்வேறு நிறங்களில் மண் போன்ற ரசாயன கழிவுகள் மற்றும் இரும்பு கழிவுகள் போன்றவை வெளி மாவட்டங்களில் இருந்து எடுத்து வந்து கொட்டப்படுவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு புகார் மனுக்கள் வரப்பெற்றது.

இதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். அதனடிப்படையில் இன்றைய தினம் காலை 6.30 மணியளவில் குளத்தூர் வட்டாட்சியர் மற்றும் மாத்தூர் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் பல்வேறு நிறங்களில் மண் போன்ற ராசயன கழிவுகள் ஏற்றி வந்த இரண்டு டாரஸ் லாரிகளை பிடித்து மேல் நடவடிக்கைக்காக மாத்தூர் காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும் தோல் கழிவுகள், இரும்புகழிவுகள் மற்றும் மண் போன்ற இராசயன கழிவுகளை முறையாக அப்புறப்படுத்தாமல் திறந்தவெளிகளில் கொட்டப்படுவதால் நிலத்தடி நீர் மற்றும் பல்வேறு வகையான நோய்கள், சுற்றுச்சூழல் பாதிப்பு

உள்ளிட்டவைகளை ஏற்படுத்த வாய்ப்பாக அமையும் என்பதால் இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---------------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**